# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, VANDAVASI.

| | | |
|---|---|---|
| Calendar | : | Case No.C.C.10/2023 |
| Miscellaneous | : | . |
| Preliminary Register | : | . |
| Deposition of Witness for | : | . |
| Prosecution | : | . |
| Defence | : | அ.சா.1 |
| Name | : | .முனியம்மாள் |
| Father’s Name | : | . க.பெ.முனுசாமி |
| Village | : | . இளங்காடு கிராமம் |
| Taluk | : | . |
| Calling | : | . |
| Religion | : | இந்து |
| Age | : | . 65 |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the year of 13.02.2026.

**1, 3, 5 , 7 எதிரி கள்ஆஜர். 2, 4, 6 எதிரிகள் ஆஜரில் இல்லை. குவிமுச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

<u>முதல் விசாரணை</u>

நான் மேற்கண்ட விலாகத்தில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். வழக்கின் எதிரிகள் அனைவரும் எனது உறவினர்கள். பட்டியல் சாட்சி 1 அங்காள பரமேஸ்வரி எனது மகன். பட்டியல் சாட்சி 3 எல்லம்மாள் எனது தாயார்.

சுமார் 10, 15 வருடங்களுக்கு முன்பு எனது தம்பி, எனது மகள் பிழைப்பிற்காக சென்னைக்கு சென்றுவிட்டார்கள். எனது தாயார் எங்கள் வீட்டில் இருந்தார். பக்கத்து தெருவில் வசித்து நான் எனது தாயாருக்கு உணவு சமைத்து கொடுப்பது வழக்கம். எதிரிகள் - பங்காளிகள் எங்கள் மனையில் கடக்கால் எடுத்து வீடுகட்ட ஆரம்பித்தார்கள். இதை கேட்க சென்ற எனது தாயாரை ஏழுமலை, பிரபு, ஏழுமலை எனது தாயாரை கை, காலை பிடித்து அடித்து தடியால் அடித்து தூக்கி தெருவில் போட்டுவிட்டார்கள். நான் எங்கள் அம்மாவிற்கு சாப்பாடு எடுத்துவரும்போது மேற்படி சம்பவத்தை பார்த்தேன் எனது தம்பிக்கு போன் போட்டு சொன்னேன். பின்பு ஆட்டோ பிடித்து மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தேன் அதிலிருந்து என் தாயார் நடக்கவே இல்லை.

மேற்படி சம்பவத்தில் எதிரிகள் என்னையும் அந்த கிழவியை அடித்தால் நீ ஏன் வருகிறாய் என்று சொல்லி அடித்தார்கள். அதனால் எனக்கு உடலில் பல இடங்களில் காயம் ஏற்பட்டது கையில் தையல்போட்டார்கள் 10நாள் மருத்துவமனையில் இருந்தேன்.

இதுசம்மந்தமாக வழக்கு சம்மந்தமாக எங்கள்மீதும் போலிசார் வழக்கு பதிவு செய்தார்கள்

போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்

**மனுவின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**

//உண்மை நகல்//

Taken down by me in Open Court,
Read over to the witness and Admitted
by him/her to be correct.

Sd/-V.Arangasamy,
Judicial Magistrate,
Vandavasi.